

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 317 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 13 – வியாழக்கிழமை 27 ஜூன் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 317 : Thiruvalluvar Year - 2055 - Aani 13 - Thursday 27 June 2024 - Dak 12 Pages ₹ 5.00


## ஏற்கனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்புடன்

# சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்த வேண்டும்!

## ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்!

## அனைத்துக் கட்சித் தலைவர்களும் வரவேற்பு! தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, ஜூன் 27-**

**சட்டப்பேரவையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். அதில், ஏற்கனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டும் எனவும், அத்துடன் சேர்த்தே சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இத்தீர்மானத்தை அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஒருமனதாக வரவேற்றனர்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.06.2024) சட்டமன்றப் பேரவையில், சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டு வரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற உயர்ந்த கோட்பாட்டின் வழியில் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற சமுதாய சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு, தனது சமூகநீதிப் பயணத்தை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமநிலையை கொண்டு வருவதே இடஒதுக்கீடு!**

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை பெறுவதில் சம வாய்ப்புகளையும், சம உரிமைகளையும் கொண்டவர்களாக மாற்றுவதன் மூலம்தான் உண்மையான, பரவலான பொருளாதார வளர்ச்சி அடைந்த சமுதாயமாக நாம் மாற இயலும். அந்த நோக்கத்துடன்தான் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய தளங்களிலும் அனைத்துத்தரப்பு மக்களிடையேயும் ஒரு சமநிலையைக் கொண்டுவருவதற்காக இடஒதுக்கீட்டு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒருங்கே வளர்ச்சியடைய வழிவகை செய்து, அதனைக் கடைப்பிடித்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம்கூட, இந்தப் பேரவையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. கோ.க.மணி அவர்கள் பேசும்போதுகூட, சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார். சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தும் என்பதை முதலில் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பொருள் குறித்து இந்தப் பேரவைக்கு முழுமையான விவரங்களை எடுத்துரைப்பது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**ஒன்றிய அரசால் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் பெரும்பணி!**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அதாவது, ஒன்றிய அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948ன்கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் பணி. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்றிய அரசால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாபெரும் பணி.

மக்கள்தொகை தொடர்பான புள்ளி விவரங்கள் அனைத்தும் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசால் தொகுத்து வெளியிடப்படுகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 3ன்படி ஒன்றிய அரசுதான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். ஆனால், பொதுவெளியில் பரவலாகத் தெரிவிக்கப்படும் ஒரு கருத்து என்னவென்றால், புள்ளிவிவரச் சட்டம் 2008, அதாவது, Collection of Statistics Act, 2008இன் அடிப்படையில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ளலாம் என்பதாகும்.

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசு எடுப்பதே முறை!**

இந்தச் சட்டத்தின்படி மாநில அரசுகள் சமூகப்பொருளாதார புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதே தவிர, இதே சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு (அ)ன்படி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையிலுள்ள இனங்கள் தொடர்பாக புள்ளி விவரங்கள் சேகரிக்க இயலாது. அந்த 7வது அட்டவணையில் தான் மக்கள்தொகை கணக்கெடுப்பு 69 வது இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இச்சட்டத்தின் பிரிவு 32ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948இன்கீழ் கணக்கெடுக்கப்படும் மக்கள்தொகை தொடர்பான புள்ளி விவரங்களை (Census data) சேகரிக்க இயலாது என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பான வழக்கு தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலையில், பொதுவெளியில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளபடி 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள இயலாது. சட்டப்படியாக நிலைக்கக்கூடிய கணக்கெடுப்பு என்றால், அது ஒன்றிய சட்டமான மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின்கீழ்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான், இப்பணியை ஒன்றிய அரசு மேற்கொள்வதுதான் முறையாக இருக்குமென்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கள்ளக்குறிச்சி துயரச் சம்பவம்: உண்மையான அக்கறையுடன் அரசு நடவடிக்கை! ஆனால்

# அ.தி.மு.க. வீண் விளம்பரம் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 27 -

சட்டப்பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. மக்களுக்கு ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றாமல், வீண் விளம்பரத்தைத் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது எனவும் கள்ளக்குறிச்சியில் நடந்துள்ள துயரச்சம்பவம் குறித்து உண்மையான அக்கறையுடன் உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்றும் இது தான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு என சட்டப் பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினரைக் கண்டித்துப் பேசினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டதற்குப் பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

**முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சியினர், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்ப விரும்பும் கேள்விகள் தொடர்பாக பதிலளிக்க இந்த அரசு தயாராக உள்ளது என்று சட்டமன்றம் தொடங்கிய முதல் நாளிலிருந்தே தெளிவாக இந்த அவையில் தெரிவித்து வருகிறேன். தாங்களும் அதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனாலும், மக்கள் பிரச்சினையைப் பற்றி இப்பேரவையில் பேச வாய்ப்பளிப்பதாகத் தெரிவித்தும், அதை ஏற்க மனமில்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியில் சென்று பேசுவது என்பது இந்தப் பேரவையினுடைய மாண்புக்கும், மரபுக்கும் ஏற்புடைய செயல் அல்ல. பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டிய அ.தி.மு.க. மக்களுக்கு ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றாமல், வீண் விளம்பரத்தைத் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது. ஆனால், நாம் இந்தத் துயர சம்பவம் குறித்து உண்மையான அக்கறையுடன் உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இது தான் நமக்கும், அவர்களுக்கும் உள்ள வேறுபாடு.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

## பிரதமர் - எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி இருக்கையில் அமர வைத்தனர்

# மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லா தேர்வு!

## தி.மு.க. சார்பில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வாழ்த்து!

புதுடெல்லி, ஜூன் 27 –

மக்களவை முன்னாள் சபாநாயகரும், ராஜஸ்தான் மாநிலம் கோட்டா தொகுதி பா.ஜ.க. எம்.பி. யுமான ஓம் பிர்லாவும், கேரள மாநிலத்திலிருந்து 8வது முறையாக மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாவேலிக்கரை எம்.பி. கொடிக் குன்னில் சுரேஷும் மக்களவை சபாநாயகர் பதவிக்கு மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில், நேற்று காலை மக்களவை சபாநாயகருக்கான தேர்தல் நடைபெற்றது. இதில், ஓம் பிர்லாவை பிரதமர் மோடி முன்மொழிய, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் வழிமொழிந்தனர். இதேபோல், கொடிக்குன்னில் சுரேஷை இந்தியா கூட்டணி சார்பில் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தேசியவாத காங்கிரஸ் கட்சி எம்.பி. சுப்ரியா சுலே உள்ளிட்டோர் முன்மொழிந்தனர். கூட்டணி கட்சியினர் வழிமொழிந்தனர்.

இதனையடுத்து குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், ஓம் பிர்லா மீண்டும் மக்களவை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக, தற்காலிக சபாநாயகர் அறிவித்தார்.

இதனையடுத்து சபாநாயகர் ஓம் பிர்லாவை, பிரதமர் மோடியும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜுவும் அழைத்துச் சென்று சபாநாயகர் இருக்கையில் அமர வைத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

**இந்தியா கூட்டணி குற்றச்சாட்டு!**

மக்களவை சபாநாயகர் பதவி ஆளுங்கட்சிக்கும், துணை சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கும் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் துணை சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவில்லை. 18வது மக்களவையிலும் துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க பா.ஜ.க. கூட்டணி அரசு மறுத்துவிட்டது. சபாநாயகர் நியமனத்தில் எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்தவில்லை என இந்தியா கூட்டணி குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில், மக்களவை சபாநாயகர் பதவிக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் வேட்பாளர்களை அறிவித்ததால் 48 ஆண்டுகளுக்கு பிறகு இப்பதவிக்கு தற்போது தேர்தல் நடைபெற்றுள்ளது. கடைசியாக 1976 ஆம் ஆண்டு மக்களவை சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**ராகுல் காந்தி வாழ்த்து!**

இந்தியாவின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்க அனுமதிக்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து அவையில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, இந்திய மக்களின் குரலை எதிர்க்கட்சிகள் எதிரொலிக்கும் என்று தெரிவித்தார். எதிர்க்கட்சியின் குரலை அனுமதிக்காமல் நாடாளுமன்றத்தை நடத்துவது ஜனநாயகத்திற்கு எதிரானது எனக் குறிப்பிட்ட ராகுல் காந்தி, எதிர்க்கட்சிகளின் குரலை நாடாளுமன்றத்தில் உரிய முறையில் அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**டி.ஆர்.பாலு வாழ்த்து!**

இதனைத்தொடர்ந்து பேசிய மக்களவை தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, புதிய சபாநாயகராகத் தேர்வாகியுள்ள ஓம் பிர்லாவிற்கு தி.மு.க. மற்றும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என பாகுபாடு காட்டாமல் ஒன்றாகக் கருதி அவையை நடத்த வேண்டும் என டி.ஆர்.பாலு எம்.பி. கேட்டுக் கொண்டார்.